**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.358/2021 பி.வா.சா.1 முத்துசாமி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 27.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

8) HMOP No. 31/1982 மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அடிப்படையில் தான் விவாகரத்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த விவாகரத்து உத்தரவை படித்து பார்த்தேனா என்றால் இல்லை . அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உத்தரவில் நாங்கள் 10 மாதம் சேர்த்து வாழ்ந்ததாக குறிப்பிட்டு இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் குல வழக்கப்படி குடும்பத்தில் மூத்தோர் எவர் ஏனும் தாலி எடுத்து கொடுத்து அதை மணமகன், மணமகள் கழுத்தில் கட்டினால் திருமணம் முழுமை பெறும் என்றால் சரிதான்.

9) நானும் ராதாமணியும் விவாகரத்து செய்தது போல 2 ம் பிரதிவாதியும் , 3 ம் பிரதிவாதியும் அவர்களுக்கிடையே விவாகரத்து பெறவில்லை என்றால் 2 ம் பிரதிவாதிக்கும் 3 ம் பிரதிவாதிக்கும் திருமணம் நடந்தது போல பதிவு மட்டும் செய்யப்பட்டு உள்ளது. அப்பதிவிற்கு எதிராக அவர்கள் இருவரும் எந்த நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்து விவாகரத்து பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி பதிவு திருமண படி 2 ம் பிரதிவாதியும் 3 ம் பிரதிவாதியும் நாளது தேதி வரை கணவன் மனைவி என்றால் சரியல்ல. அந்த பதிவு திருமணத்தின் படி 2, 3 பிரதிவாதிகள் தான் கணவன் மனைவி என்றும் அவர்களுக்கு பிறந்த குழந்தைகள் தான் 4, 5 பிரதிவாதிகள் தான் என்றும் சொன்னால் சரியல்ல.

10) ராதாமணிக்கு வாதி பிறந்த விவரம் எனக்கு சொல்லவில்லை என எதிர்வழக்குரையில் கட்சி செய்துள்ள போது வாதி 13-03-1978 அன்று பிறந்ததை நான் மறுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் ராதாமணிக்கும் உள்ள

கருத்து வேறுபாடை மனதில் வைத்துக் கொண்டு எனக்கு சட்டப்படி பிறந்த என் மகனான வாதியை மகன் இல்லை என மறுக்கிறேன் என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு எனது சட்டப்பூர்வ வாரிசான வாதிக்கு சொத்து கொடுப்பதை தவிர்க்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வாரிசுகள் அல்லாத 4, 5 பிரதிவாதிகள் பெயரில் வாரிசுகள் என குறிப்பிட்டு தான சாசனங்கள் ஏற்படுத்தியது ஏமாற்றும் செயல் என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி